**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் மார்ச் மாதம் 25 ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.205/2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சாயல்குடி காவல் நிலைய குற்ற எண்.53/2025. |
| **1 வது எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | மூர்த்தி (எ) கிருஷ்ணமூர்த்தி |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | சுப்பிரமணியன் |
| 4. | வயது | 31/2025 |
| 5. | தொழில் | - |
| 6. | முகவரி | கீழகூட்டுடன்காடு, அய்யனார் காலணி, புதுக்கோட்டை, கூட்டுடன்காடு, தூத்துக்குடி. |
| **2 வது எதிரியின் விபரம்** | | |
| 7. | பெயர் | கண்ணன் |
| 8. | தகப்பனார்/கணவர் பெயர் | மாரிமுத்து |
| 9. | வயது | 34/2025 |
| 10. | தொழில் | - |
| 11. | முகவரி | வடக்குத் தெரு, நரிப்பையூர், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். |
| **3 வது எதிரியின் விபரம்** | | |
| 12. | பெயர் | மணிகண்டன் |
| 13. | தகப்பனார்/கணவர் பெயர் | பெரியசாமி |
| 14. | வயது | 25/2025 |

<table>
<tr><td>15.</td><td>தொழில்</td><td>-</td></tr>
<tr><td>16.</td><td>முகவரி</td><td>வடக்குத் தெரு, நரிப்பையூர், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.</td></tr>
<tr><td>17.</td><td>சம்பவ நாள்</td><td>24.03.2025 ம் தேதி 18.30 மணி</td></tr>
<tr><td>18.</td><td>புகார் தேதி</td><td>24.03.2025 ம் தேதி 19.30 மணி</td></tr>
<tr><td>19.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள்</td><td>A1 - AB<br>A2, A3 - 25.03.2025</td></tr>
<tr><td>20.</td><td>பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>A1 - AB<br>A2, A3 - 09.04.2025</td></tr>
<tr><td>21.</td><td>கமிட்டல் உத்தரவு</td><td>இல்லை</td></tr>
<tr><td>22.</td><td>விசாரணை துவங்கப்பட்ட நாள்</td><td>11.08.2025</td></tr>
<tr><td>23.</td><td>விசாரணை முடிவுற்ற நாள்</td><td>23.03.2026</td></tr>
<tr><td rowspan="2">24.</td><td>சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1 வது எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(2) BNS ன் கீழும், 2, 3 வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழும்</td></tr>
<tr><td>வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1 வது எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(2) BNS ன் கீழும், 2, 3 வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழும்</td></tr>
<tr><td>25.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>-</td></tr>
<tr><td>26.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>
<table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>27.02.2026</td><td>27.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>10.03.2026</td><td>10.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>10.03.2026</td><td>10.03.2026</td></tr>
</table>
</td></tr>
</table>

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:11 +0530

| | | |
|---|---|---|
| | | அ.சா.4 \| 16.03.2026 \| 16.03.2026 |
| 27. | எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 23.03.2026 |
| 28. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 29. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள் | M.P.No.02/2026 Petition U/s.320 Cr.P.C. filed and dismissed on 27.02.2026. |
| 30. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.S.சொக்கேசன் |
| 31. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.P.தர்மராஜ் |
| 32. | எதிரிகளின் கூற்று | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 33. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 25.03.2026 |
| 34. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 25.03.2026 |
| 35. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து 1வது எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 296(b), 118(1), 351(2) BNS ன் கீழும், 2, 3 வது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழான குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) B.N.S.S Act-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:14 +0530

| | | |
|---|---|---|
| | | இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குத்தடயமான சுமார் 40.5 செ.மீ. நீளமுள்ள இரும்பிலான அரிவாள் – 1, அதில் 19.5 செ.மீ. நீளமுள்ள வெட்டும் பகுதியும், 21 செ.மீ. நீளமுள்ள இரும்பிலான கைபிடி பகுதியும் ஒன்று இந்நீதிமன்றத்தில் P.R.No.103/2025 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 23.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 1 திரு.S.சொக்கேசன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.தர்மராஜ் அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:18 +0530

2. புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் முன்பகை இருந்து வந்த நிலையில், கடந்த 24.03.2025 ம் தேதி 18.30 மணிக்கு நரிப்பையூரில் உள்ள புகார்தாரரின் பிஸ்மி ஹோட்டலுக்கு வந்த எதிரிகள் மூவரில் 2, 3 எதிரிகள் இருவரும் புகார்தாரரைப் பார்த்து ஏண்டா தாயோலி சுன்னி மகனே தோசை கேட்டா கொடுக்காம வெளியே போக சொல்லுற என்று பொது இடத்தில் அசிங்கமாகப் பேசியதும் உடனே புகார்தாரர் மரியாதையாக பேசு என்று சொன்னபோது 1 வது எதிரியானவர் இவன்கிட்ட என்னடா பேசுற என்று கூறி தான் பின்பக்கம் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து திருப்பி பிடித்து புகார்தாரரின் தலையில் அடித்தும் 2, 3 வது எதிரிகள் புகார்தாரரை கையால் கழுத்து மற்றும் உடம்பில் அடித்து கீழே தள்ளியும், 1 வது எதிரி புகார்தாரரைப் பார்த்து அருவாளை காண்பித்து ஒழுங்கா கடை வச்சு நடத்திக்கோ இல்ல உன்ன இங்கயே வெட்டி போட்டுருவோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1 வது எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(2) BNS ன் கீழும், 2, 3 வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 26.02.2026 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் 230 B.N.S.S Act ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 29.09.2025 ம்



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:22 +0530

தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் 263(1) B.N.S.S Act ன் கீழ் 1 வது எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(2) BNS ன் கீழும், 2, 3 வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து 263(2) B.N.S.S Act ன் படி எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு 265 B.N.S.S Act-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் எதிரிகள் சமாதானமாக சென்று விட்டதாக பிரிவு 359 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு வழக்கின் சட்டப்பிரிவுகளானது சமரசம் செய்ய முடியாத குற்றச்சாட்டிற்குள்ளாவதால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 8 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், பார்வை மகஜர் சாட்சிகள் அ.சா.2, அ.சா.3 ஆகவும், கூடுதல் சாட்சியாக நிலைய சார்பு ஆய்வாளர் அ.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். சம்பவ சாட்சிகள், காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:27 +0530

முதல் 8 வரை சான்றாவணங்கள், அ.சா.பொ.1 சான்றுப்பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 1 ஆண்டுக்கு முன்பு ஒரு நாள் மாலை நேரத்தில் இரண்டு நபர்கள் அ.சா.1ன் ஹோட்டலுக்கு சாப்பிட வந்தவர்களுக்குள் வாய்தகராறு ஏற்பட்டதில் கூட்டத்திற்குள் யாரோ ஒருவர் அ.சா.1னை தள்ளிவிட்டதில் அ.சா.1க்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், தள்ளிவிட்டவர் யார் என்று தெரியாது என்றும், அதன் பிறகு நான் கடலாடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவிட்டு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்றேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் விசாரித்ததாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியாது என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் (அ.சா.ஆ.1) தன்னுடையது என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து என்று தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 தனது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் (அ.சா.ஆ.2) என்றும், கடையில் இருந்தபோது போலீசார்

கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 தனது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், கடையில் இருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2025 ம் தேதி 19.00 மணிக்கு சாயல்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.உக்ரபாண்டியன் அவர்கள் நிலையப்பொறுப்பில் சாயல்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அங்கு சென்று முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்த நரிப்பையூரைச் சேர்ந்த சாகுல் ஹமீது மகன் காதர் மைதீன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.3) பெற்று நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.53/2025 பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4) பதிவு செய்ததாகவும், அன்று இரவு 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாண்டி மற்றும் குருசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.5) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) தயார் செய்ததாகவும், அன்றைய தினமே 20.45 மணிக்கு மேற்படி பாண்டி மற்றும் குருசாமி ஆகியோர்களை சாட்சியாக வைத்து இந்த வழக்கின் 1வது எதிரி சம்பவ இடத்தில் விட்டுச்சென்ற அருவாளை அத்தாட்சியின் மூலம்

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:33 +0530

கைப்பற்றியதாகவும், சாட்சிகளான காதர் மைதீன், முகமது மஜீது, காதர்பாட்சா, மன்சூர்கான் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், எதிரிகளை தேடி வந்த நிலையில் 1வது எதிரி மாண்பமை இராமநாதபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையம் பெற்றுவிட்டபடியால் அவரை கைது செய்யவில்லை என்றும், 2, 3 எதிரிகளை நரிப்பையூர் சந்தன மாரியம்மன் கோவில் அருகே வைத்து 24.03.2025ம் தேதி 22.30 மணிக்கு கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், பின்பு அ.சா.1 காதர் மைதீனுக்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் திரு.அருண் விஸ்வநாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் அ.சா.1க்கு அளித்த காயச்சான்றை பெற்றுள்ளதாகவும், மருத்துவர் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று (அ.சா.ஆ.8) வழங்கியுள்ளதாகவும், பின்பு இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட 40.5 செ.மீ இரும்பு அருவாள் – 1 அதில் 19.5 செ.மீ நீளமுள்ள வெட்டும் பகுதியில் 21 செ.மீ நீளமுள்ள இரும்பிலான கைப்பிடி பகுதியில் உள்ள அந்த அருவாளை படிவம் 91 (அ.சா.ஆ.9) மூலம் நீதிமன்றத்திற்கு ஒப்படைத்துள்ளதாகவும், 40.5 செ.மீ இரும்பு அருவாள் – 1 அதில் 19.5 செ.மீ நீளமுள்ள வெட்டும் பகுதியில் 21 செ.மீ நீளமுள்ள இரும்பிலான கைப்பிடி பகுதியில் உள்ள அருவாள் ஒன்று அ.சா.பொ.1 என்றும், இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS-ன் கீழ் குற்ற

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:36 +0530

இறுதியறிக்கையை 03.03.2023ம் தேதி தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரிகளிடம் பிரிவு 351(1)(b) B.N.S.S. Actன் கீழ் 23.03.2026ம் தேதியன்று வினவிய போது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1வது எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(2) BNSன் கீழும், 2, 3வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNSன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

## தீர்வு

11. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1ம், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத்தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரிகள்

மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து எதிரிகள் விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

36. இவ்வழக்கில் அ.சா.1ம், எதிரிகளும் பெரியோர் முன்னிலையில் சமாதானமாகி விட்டதாக பிரிவு 359 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் 4 தவிர இதர சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

37. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 அளித்த சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, கடந்த 24.03.2025ம் தேதி 18.30 மணிக்கு நரிப்பையூரில் உள்ள புகார்தாரரின் பிஸ்மி ஹோட்டலுக்கு வந்த எதிரிகள் மூவரில் 2, 3 எதிரிகள் இருவரும் புகார்தாரரைப் பார்த்து ஏண்டா தாயோலி சுன்னி மகனே தோசை கேட்டா கொடுக்காம வெளியே போக சொல்லுற என்று பொது இடத்தில் அசிங்கமாகப் பேசியதும் உடனே புகார்தாரர் மரியாதையாக பேசு என்று சொன்னபோது 1வது எதிரியானவர் இவன்கிட்ட என்னடா பேசுற என்று கூறி தான் பின்பக்கம் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து திருப்பி பிடித்து புகார்தாரரின் தலையில் அடித்தும் 2, 3வது எதிரிகள் புகார்தாரரை கையால் கழுத்து மற்றும் உடம்பில் அடித்து கீழே தள்ளியும், 1வது எதிரி புகார்தாரரைப் பார்த்து அருவாளை காண்பித்து ஒழுங்கா கடை வச்சு நடத்திக்கோ இல்ல உன்ன

இங்கயே வெட்டி போட்டுருவோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது.

38. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் வாக்குமூலம் அளித்த போதிலும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 1 ஆண்டுக்கு முன்பு ஒரு நாள் மாலை நேரத்தில் இரண்டு நபர்கள் அ.சா.1ன் ஹோட்டலுக்கு சாப்பிட வந்தவர்களுக்குள் வாய்தகராறு ஏற்பட்டதில் கூட்டத்திற்குள் யாரோ ஒருவர் அ.சா.1னை தள்ளிவிட்டதில் அ.சா.1க்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், தள்ளிவிட்டவர் யார் என்று தெரியாது என்றும், அதன் பிறகு நான் கடலாடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவிட்டு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்றேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் விசாரித்ததாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் தன்மை நிலையான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

39. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலம் மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:48 +0530

தகவல் அறிக்கை ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல் 4 தவிர சம்பவ சாட்சிகள், மருத்துவர், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படவில்லை. கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட நிலைய சார்பு ஆய்வாளர் அளித்த சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எதிரிகள் தான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார்கள் என்று அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் 1வது எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(2) BNS ன் கீழும், 2, 3 வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

40. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து 1வது எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 296(b), 118(1), 351(2) BNS ன் கீழும், 2, 3 வது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழான குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) B.N.S.S Act-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

41. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குத்தடயமான சுமார் 40.5 செ.மீ. நீளமுள்ள இரும்பிலான அரிவாள் - 1, அதில் 19.5 செ.மீ. நீளமுள்ள வெட்டும் பகுதியும், 21 செ.மீ. நீளமுள்ள இரும்பிலான கைபிடி பகுதியும் ஒன்று இந்நீதிமன்றத்தில்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:51 +0530

P.R.No.103/2025 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

42. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் தேதி புதன்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:10:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | காதர்மைதீன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | பாண்டி |
| அ.சா.3 | குருசாமி |
| அ.சா.4 | கார்த்திக் (சார்பு ஆய்வாளர்) |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 24.03.2025 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| Ex.P.2 | 24.03.2025 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |

| | | |
|---|---|---|
| Ex.P.3 | 24.03.2025 | புகார் வாக்குமூலம் |
| Ex.P.4 | 24.03.2025 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.5 | 24.03.2025 | பார்வை மகஜர் |
| Ex.P.6 | 24.03.2025 | மாதிரி வரைபடம் |
| Ex.P.7 | 24.03.2025 | அத்தாட்சி |
| Ex.P.8 | 10.05.2025 | அ.சா.1 க்கு காதர் மைதீனுக்கு அளித்த காயச்சான்று |
| Ex.P.9 | 24.03.2025 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்று பொருள்** :-

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | 40.5 செ.மீ. இரும்பு அருவாள் - அதில் 19.5 செ.மீ. நீளமுள்ள வெட்டும் பகுதியில் 21 செ.மீ. நீளமுள்ள இரும்பிலான கைப்பிடி பகுதியில் உள்ள அருவாள் ஒன்று |

எதிரிகள் தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**குறிப்பு:-**

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.